STC 494/2022

22.08.2024.

பு.சா.1 –

பெயர்: அருண் ஆதித்யா

த/பெ.

பு.சா.1 கு.ப.ம.எண். /2024-ன் கீழ் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused Present.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் நடத்தி வரும் நிறுவம் ஆயுர்வேத பொருட்கள் செய்யும் நிறுவனம் என்றால் சரி தான். நான் எனது சட்ட அறிவிப்பில் ஆயுர்வேத பொருட்களை தயாரிக்கிறேன் என்றால் சரி தான். மருந்துபொருட்களை விற்பனை செய்ய அரசாங்கத்திடம் அனுமதி பெற வேண்டும் என்றால் சரி தான். நான் அரசாங்கத்திடம் அனுமதி பெற்றுள்ளேன். எனது நிறுவனத்தினை நான் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. அவசியப்படும் பட்சத்தில் நிறுவன பதிவுச்சான்றிதழை இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவேன். எனது நிறுவனத்தில் 30 நபர்கள் வேலை செய்கிறார்கள். நிறுவனத்தின் பொருட்களை விற்க விற்பனை பிரதிநிதிகள் இருக்கிறார்கள். நானும் விற்பனை செய்கிறேன்.

வெளிமாநிலமான கேரளா மாநிலத்தில் எங்களது நிறுவன விற்பனை பிரதிநிதிகள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். விற்பனை பிரதிநிதிகள் தான் கேரளா மாநிலத்தில் மருந்து விற்க ஆர்டர் எடுப்பார்கள் என்றால் சரி தான். கேராளா மாநிலத்தில் 12 விற்பனை பிரதிநிதிகள் இருக்கிறார்கள். அதில் உள்ள 12 பேர்களில் ஒருவர் தான் அந்த நிறுவனத்தில் ஆர்டர் எடுத்துக் கொடுத்தார் என்றால் சரி தான் அதன் மூலம் தான் இந்த வழக்கு வந்தது என்றால் சரிதான். வழக்கு தொடர்பான பொருட்களுக்கு காசோலை வழங்கி அதன் மூலம் இந்த வழக்கு தொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எதிரியை நான் இன்று தான் முதல் முறை பார்க்கிறேன் என்றால் சரியல்ல. நான் விற்பனை செய்யும் பொருட்களுக்கு ஜிஎஸ்டி கட்டுகிறேன் என்றால் சரி தான். நான் 12 சதவீத ஜிஎஸ்டி கட்டுகிறேன்.

நான் மாதம் மாதம் மத்திய அரசிற்கு கணக்கு காண்பித்து ஜிஎஸ்டி தாக்கல் செய்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கு பில்லையும் மத்திய அரசிடம் கணக்கு காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக தாக்கல்செய்த வரியின் பில்லை (SR 10) ஐ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். நான் வழககில் கூறியுள்ள படி பொருளை சப்ளை செய்யவில்லை என்றாலும்

அதனால் தான் பில்லை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

எங்கள் நிறுவனத்தில் பொருட்களை விற்பனை செய்ய தனியாக பதிவேடு பராமரிப்பது இல்லை. இன்வாஸ் -ஐ அடிப்படையாக கொண்டு தான் கணக்கிடுவோம். மேற்படி பதிவேட்டை கணிப்பொறியில் பராமரிக்கிறோம். அதற்குண்டான நகலை நீதிமன்றம் கேட்கும்பட்சத்தில் சமர்ப்பிக்க தயராக உள்ளேன். மருத்துவர் பெயர், மருத்துவமனை, முகவர்கள் மற்றும் சில்லரை வணிகம் செய்பவர்களுக்கும் நாங்கள் மருந்துகளை கொடுப்போம். ஆயுர்வேத மருந்துகளை நான் மருத்துவரின் பறிந்துரையின் பேரிலும் கொடுப்போன். ஆயுர்வேதம் தொடர்பில்லாத நபர்களுக்கு நான் மருந்து சப்ளை செய்வது இல்லை.

ஆயுர்வேத மருந்துக்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல, நான் எதிரிக்கு மருந்துகளை சப்ளை செய்தது, பொய் என்றால் சரியல்ல. வில்வா திரி டிரெடிசனல் ஆயுர்வேதா மருத்துவமனைக்கு நான் சப்ளை செய்த இன்வாஸை சமர்ப்பிப்பேன் என்றால் சரிதான்.

குறுக்குவிசாரணை தொடர்ச்சி 23.09.2024 அன்று ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/- Thiru. E. Pragasam B.A.,B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.